RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்-55 | 01 மார்ச் | சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## பாரத் நெட் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் 11,507 கிராம பஞ்சாயத்துகள் இணைப்பு: அமைச்சர் பிடிஆர் தகவல்



சென்னை, மார்ச்.1

தமிழகத்தில் ‘பாரத் நெட்’ திட்டத்தின் மூலம் 11,507 கிராம பஞ்சாயத்துகளுக்கு அதிவேக இணைய இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் தகவல் தொடர்பு அமைச்சகத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட ‘பாரத் நெட்’ திட்டம், இந்தியாவின் அனைத்து கிராமங்களையும், கிராம பஞ்சாயத்துகளையும் டிஜிட்டல் முறையில் இணைப்பதற்கான பிராட்பேண்ட் இணைப்பை வழங்கும் வகையில் உருவாக்கப்பட்டது.

அதன்படி, நாட்டிலுள்ள 2.5 லட்சம் கிராம பஞ்சாயத்துகளையும் இணைத்து, அனைத்து கிராம பஞ்சாயத்துகளுக்கும் 1 ஜிபிபிஎஸ் அளவிலான அதிவேக இணைய இணைப்பை வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

அந்தவகையில் தமிழத்தில் ‘பாரத் நெட்’ திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ‘பாரத் நெட்’ திட்டத்துக்கான 2ம் கட்டத்தின் கீழ், தமிழகத்தில் உள்ள 12,525 கிராம பஞ்சாயத்துகளுக்கு ரூ.1,815.31 கோடியில் இணைய இணைப்புகள் வழங்க திட்டமிடப்பட்டது. அதன்படி இந்த கிராமங்கள் பயன்பெறும் வகையில் 57,500 கி.மீ நீளத்துக்கு ஆப்டிகல் ஃபைபர் பதிக்கும் பணிகள், தமிழக அரசின் கீழ் செயல்படும் சிறப்பு நோக்கு நிறுவனமான தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (டான்பிநெட்) மூலம் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தில் ‘பாரத் நெட்’ திட்டம் மூலம் கிராம பஞ்சாயத்துகளை இணைக்கும் பணிகள் 91.8 சதவீதம் நிறைவடைந்துள்ளன. அதன்படி இதுவரை மொத்தம் 11,507 கிராம பஞ்சாயத்துகள் இத்திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு, அதிவேக இணைய சேவையைப் பெற்று வருகின்றன.

இந்த கிராமங்களில் 48,082 கி.மீ தொலைவுக்கு உயர்மட்டக் கம்பத்தின் வழியாகவும், 5,107 கி.மீ தொலைவுக்கு நிலத்தடி ஆப்டிகல் ஃபைபர் வழியாகவும் ஊராட்சி ஒன்றியங்கள் இணைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## “தென்மாநிலங்களை தண்டிப்பதை ஏற்கமாட்டோம்!” பிறந்தநாளில் முதல்வர் ஸ்டாலின் உறுதி



சென்னை, மார்ச்.1

“நாட்டினுடைய வளர்ச்சிக்காக மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய தென்மாநிலங்களைத் தண்டிக்காதீர்கள்! அப்படி நடந்தால், அதைத் தமிழ்நாடும் திமுகவும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது” என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் இன்று தனது பிறந்தநாளையொட்டி விடுத்துள்ள செய்தியில், “““பொதுவாக நான் பிறந்த நாளைப் பெரிய அளவில் ஆடம்பரமாக, ஆர்ப்பாட்ட விழாவாகக் கொண்டாடுவது இல்லை. ஆனால், திமுக தொண்டர்கள், மக்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்குவது, அரசின் சாதனைகள் மற்றும் கட்சிக் கொள்கைகளை எடுத்துச் சொல்லும் பொதுக் கூட்டங்கள் நடத்துவது என்று செயல்படுவார்கள்.

இந்த முறை, என்னுடைய பிறந்தநாள் வேண்டுகோளாக, என் உயிரோடு கலந்திருக்கும் திமுக தொண்டர்களுக்கு ஒரு கோரிக்கையை முன் வைக்கிறேன். இன்றைக்குத் தமிழ்நாடு தன்னுடைய உயிர்ப் பிரச்சினையான மொழிப் போரையும், தன்னுடைய உரிமைப் பிரச்சினையான தொகுதி மறுசீரமைப்பையும் எதிர்கொண்டுள்ளது. இதனுடைய உண்மையான நோக்கத்தை நீங்கள், மக்களிடம் கொண்டு சேர்க்கக் கேட்டுக் கொள்கிறேன்.

தொகுதி மறுசீரமைப்பு என்பது நமது மாநிலத்தின் சுயமரியாதை, சமூக நீதி, நம்முடைய சமூக நலத்திட்டங்களைப் பெரிதும் பாதிக்கும். இதை நீங்கள் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். ஒவ்வொருவரும் மாநிலம் காக்க எழுந்து நிற்க வேண்டும். இந்தியாவுக்கே வழிகாட்டியாக நாம் போராட்டத்தைத் தொடங்கினோம். இப்போது கர்நாடகா, பஞ்சாப், தெலங்கானா போன்ற மாநிலங்களில் இருந்து நமக்கான ஆதரவுக் குரல் வந்துள்ளது.

இதைப் பார்த்த ஒன்றிய அரசு, இந்தியைத் திணிக்கவில்லை என்று சொல்லிக்கொண்டே அதற்கான அனைத்து முன்னெடுப்புகளையும் எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாததால், நமக்கான நிதியையும் இன்னும் தரவில்லை. அதேபோல், “தமிழ்நாட்டுக்கான தொகுதிகளைக் குறைக்க மாட்டோம்” என்று மட்டும்தான் சொல்கிறார்களே தவிர, மற்ற மாநிலங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க மாட்டோம் என்று சொல்லவில்லை!

நாம் கேட்பது, மக்கள்தொகை அடிப்படையில் தொகுதிகளைப் பிரிக்காதீர்கள்! நாட்டினுடைய வளர்ச்சிக்காக மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய தென்மாநிலங்களைத் தண்டிக்காதீர்கள்! அப்படி நடந்தால், அதைத் தமிழ்நாடும் திமுகவும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்!

நாம் ஒரு உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழ்நாட்டின் நலனையும், எதிர்காலத்தையும், யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டுக்காக நாம் ஒன்றுபட்டு போராட வேண்டும்! தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!” என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

## கேரள பல்கலை.யில் இளங்கோவடிகள் பெயரில் தமிழ் இருக்கை ரூ.1 கோடி ஒதுக்கி அரசாணை வெளியீடு




சென்னை, மார்ச்.1

கேரள பல்கலைக்கழகத்தில் இளங்கோவடிகள் பெயரில் தமிழ் இருக்கை அமைக்க தமிழக அரசின் பங்களிப்பாக ரூ.1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழ் வளர்ச்சித்துறைச் செயலர் வே.ராஜாராமன் பிறப்பித்த அரசாணையில் கூறியிருப்பதாவது: சிலப்பதிகாரம் என்னும் பெருங்காப்பியத்தை தமிழுக்கு தந்து அழியாப் புகழ் பெற்ற இளங்கோவடிகளுக்கு கேரளத்தில் ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தில் ஓர் இருக்கை அமைய வேண்டும் என்பது கேரளம் வாழ் தமிழர்களின் நீண்ட கால விருப்பம். அந்த வகையில் கேரள பல்கலைக்கழகத்தில் இளங்கோவடிகள் பெயரில் தமிழ் இருக்கை அமைக்க தேவைப்படும் தொகை ரூ.2.50 கோடியில் தமிழக அரசின் பங்குத் தொகையான ரூ.1 கோடியை கேரள பல்கலைக்கழகத்துக்கு வழங்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் பரிந்துரைத்துள்ளார்.

இதை பரிசீலித்த அரசு, ரூ.1 கோடியை சில நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது. அதன்படி, இளங்கோவடிகள் இருக்கை மூலம் தமிழ் மலையாள மொழிகளின் ஒப்பாய்வு, மொழி பெயர்ப்பு உள்ளிட்ட பணிகளை மட்டுமே மேற்கொள்ள வேண்டும். தமிழ் வளர்ச்சித்துறை அலுவலர்கள் கேரள பல்கலைக்கழக இளங்கோவடிகள் இருக்கையை ஆய்வு செய்ய வருகை தரும்போது முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் உள்ளிட்ட நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்புக்கு விசிக பொதுச்செயலாளர் துரை. ரவிக்குமார் எம்.பி., துணை பொதுச்செயலாளர் எஸ்.எஸ். பாலாஜி எம்எல்ஏ உள்ளிட்டோர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

## வக்பு மசோதா திருத்தங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்



புதுடெல்லி, மார்ச்.1

வக்பு சட்ட திருத்த மசோதாவில், நாடாளுமன்ற கூட்டுக்குழு பரிந்துரைத்த 23 மாற்றங்களில் 14 மாற்றங்களை மத்திய அமைச்சரவை ஏற்றுக்கொண்டு ஒப்புதல் அளித்துள்ளது.

நாட்டில் உள்ள முஸ்லிம் அறக்கட்டளை சொத்துகளை நிர்வகிப்பது தொடர்பாக மத்திய, மாநில வக்பு வாரியங்கள் முடிவெடுக்கின்றன. இதில் வெளிப்படைத் தன்மையை கொண்டுவரவும், வக்பு வாரிய சொத்துகள் பதிவு செய்யப்படுவதை ஒழுங்குபடுத்தவும், துஷ்பிரயோகத்தை தவிர்க்கவும், வக்பு சட்டத்தில் (1995) திருத்தங்களை கொண்டு வந்து மக்களவையில் மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கிரிண் ரிஜிஜூ கடந்த ஆண்டு மசோதா தாக்கல் செய்தார்.

இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால், சட்ட திருத்த மசோதா, நாடாளுமன்ற கூட்டுக்குழு ஆய்வுக்காக கடந்த ஆகஸ்ட் 8ம் தேதி அனுப்பப்பட்டது. இதை ஆய்வு செய்யும் கூட்டுக்குழுவில் பாஜக மற்றும் கூட்டணி கட்சிகளை சேர்ந்த 16 எம்.பி.க்களும், எதிர்க்கட்சிகளை சேர்ந்த 10 எம்.பி.க்களும் இடம் பெற்றிருந்தனர். இதன் தலைவராக பாஜக எம்.பி. ஜெகதாம்பிகா பால் இருந்தார். இந்த குழு கடந்த 6 மாதங்களில் 30க்கும் மேற்பட்ட ஆலோசனை கூட்டங்களை நடத்தியது. இதில் 66 மாற்றங்கள் முன்மொழியப்பட்டன. எதிர்க்கட்சிகள் கூறிய 44 மாற்றங்கள் நிராகரிக்கப்பட்டன. ஓட்டெடுப்புக்கு பிறகு, 15 11 என்ற பெரும்பான்மை அடிப்படையில் உறுப்பினர்கள் பரிந்துரைத்த மாற்றங்கள் ஏற்கப்பட்டன.

கூட்டுக் குழுவின் 655 பக்க அறிக்கை மக்களவை தலைவரிடம் கடந்த ஜனவரி 30ம் தேதி வழங்கப்பட்டது. அதன்பிறகு, நாடாளுமன்றத்தில் இந்த அறிக்கை கடந்த 13ம் தேதி தாக்கல் செய்யப்பட்டது. அறிக்கையில் எதிர்க்கட்சிகளின் அதிருப்தி கருத்துகள் நீக்கப்பட்டதாக எதிர்க்கட்சி எம்.பி.க்கள் குற்றம்சாட்டினர்.

இதுதொடர்பாக நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரிண் ரிஜிஜூ, எதிர்ப்பு தெரிவித்த எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஆகியோருடன் மக்களவை தலைவர் ஆலோசனை நடத்தினார். இதில், அதிருப்தி கருத்துகளையும் அறிக்கையில் சேர்க்க முடிவு செய்யப்பட்டது.

நாடாளுமன்ற கூட்டுக் குழு பரிந்துரைத்த 23 மாற்றங்களில் 14 மாற்றங்களுக்கு மத்திய அமைச்சரவை கடந்த 19ம் தேதி ஒப்புதல் அளித்துள்ளது. முஸ்லிம் அல்லாத 2 உறுப்பினர்கள், 2 முஸ்லிம் பெண்கள், முஸ்லிம் ஓபிசி பிரிவை சேர்ந்த ஒரு உறுப்பினரை வக்பு கவுன்சிலில் இடம்பெற செய்வது, வக்பு தீர்ப்பாயத்தில் முஸ்லிம் சட்டங்களை நன்கு அறிந்த உறுப்பினர் இடம்பெறுவது போன்ற மாற்றமும் இதில் அடங்கும்.

ஒரு சொத்து வக்பு வாரிய சொத்தா அல்லது அரசு நிலமா என்பதை, மாவட்ட ஆட்சியருக்கு பதிலாக மாநிலங்களால் நியமிக்கப்படும் அதிகாரி தீர்மானிப்பார் என்ற முக்கிய மாற்றமும் இதில் இடம்பெற்றுள்ளது. வக்பு வாரிய சொத்துகளை பதிவு செய்து இணையதளத்தில் தெரிவிக்க 6 மாத அவகாசம் அளிக்கும் மாற்றத்துக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற பட்ஜெட் 2வது கட்ட கூட்டத் தொடர் மார்ச் 10 முதல் ஏப்ரல் 4ம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தொடரில் வக்பு சட்டத்திருத்த மசோதா தாக்கல் செய்யப்படும் என தெரிகிறது. கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் மசோதா நிறைவேற்றப்படும் என்று பாஜக தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

## “இருமொழி கொள்கையால் தமிழக இளைஞர்கள் வாய்ப்புகளை இழந்தவர்களாக உணர்கிறார்கள்”: ஆளுநர் ரவி



சென்னை, மார்ச்.1

“தேசிய கல்விக் கொள்கை 2020 ஐ அமல்படுத்துவதற்கு பெரும் தேவை உள்ளது. மாநில அரசின் கடுமையான இரு மொழிக் கொள்கை காரணமாக அண்டை மாநிலங்களைச் சேர்ந்த இளைஞர்களுடன் ஒப்பிடும்போது இந்த பிராந்திய இளைஞர்கள் வாய்ப்புகளை இழந்தவர்களாக உணர்கிறார்கள்” என தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் தேசிய கல்வி கொள்கை விவகாரம் மீண்டும் விவாதப் பொருளாக மாறியுள்ளது. இந்நிலையில், தமிழ்நாட்டு ஆளுநரின் அதிகாரபூர்வ எக்ஸ் தளத்தில், “தென் தமிழ்நாட்டைச் சேர்ந்த கல்வி, வணிகம், சுகாதாரம், விருந்தோம்பல், இளைஞர் ஸ்டார்ட் அப்கள் மற்றும் பெண் தொழில்முனைவோர், குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த பெருவாரியான உள்ளூர் தலைவர்கள் மற்றும் பல்வேறு கல்வி நிறுவனங்களின் மாணவர்களுடன் கலந்துரையாடினேன்.

ஏராளமான சிரமங்கள் மற்றும் முறைசார் தடங்கல்கள் இருந்தபோதிலும் வாழ்க்கையை சிறப்பாக மாற்றும் இவர்களின் நேர்மறையான ஆற்றலையும் தொழில்முனைவுத் திறனையும் காண்பது ஊக்கமளிப்பதாக இருந்தது. இந்தப் பகுதி, மனித ஆற்றல் மற்றும் இயற்கை வளங்களால் நிறைந்துள்ளது, ஆனாலும் இது புறக்கணிக்கப்பட்டு பின்தங்கியுள்ளது போன்ற உணர்வைத் தருகிறது.

தொழில்மயமாக்கலுக்கான மிகப்பெரிய சாத்தியக்கூறுகள் இருந்தபோதிலும், இங்குள்ள மக்கள் வாய்ப்புகள் புறக்கணிக்கப்பட்டவர்களாக உணர்கிறார்கள். இளைஞர்களிடையே காணப்படும் போதைப்பொருள் துஷ்பிரயோகத்தின் சிக்கல்கள் தீவிரமானவை. ஊடக தலைப்புச் செய்திகளில் இடம்பெறும் திட்டமிடப்பட்ட போராட்டங்களுக்கு மாறாக, தேசிய கல்விக் கொள்கை 2020 ஐ அமல்படுத்துவதற்கு பெரும் தேவை உள்ளது.

மாநில அரசின் கடுமையான இரு மொழிக் கொள்கை காரணமாக அண்டை மாநிலங்களைச் சேர்ந்த இளைஞர்களுடன் ஒப்பிடும்போது இந்த பிராந்திய இளைஞர்கள் வாய்ப்புகளை இழந்தவர்களாக உணர்கிறார்கள். துரதிருஷ்டவசமாக இந்தியை எதிர்க்கிறோம் என்ற பெயரில் எந்தவொரு தென்மாநில மொழிகளையும் கூட படிக்க அனுமதிக்கப்படாதவர்களாக அவர்கள் உணர்கிறார்கள். இது உண்மையிலேயே நியாயமற்றது. மொழியை படிப்பதற்கான தேர்வு நமது இளைஞர்களுக்கு இருக்க வேண்டும்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக ரஷ்யாவின் தாக்குதலால் நிலைகுலைந்திருக்கும் உக்ரைன் அமெரிக்காவின் புதிய போக்கு: ஜனநாயகத்துக்கு ஆபத்து!



வாஷிங்டன், மார்ச்.1

மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக ரஷ்யாவின் தாக்குதலால் நிலைகுலைந்திருக்கும் உக்ரைன், டிரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசின் புதிய நிலைப்பாட்டால் புதிய சிக்கலுக்கு உள்ளாகியிருக்கிறது. இது உலக அளவில் வேறு சில பின்னடைவுகளுக்கு இட்டுச்செல்லக்கூடும் என்கிற அச்சமும் எழுந்திருக்கிறது.

ரஷ்யாவால் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி, நேட்டோ அமைப்பில் உறுப்பினராகச் சேர உக்ரைன் விண்ணப்பித்ததைத் தொடர்ந்து, 2022 பிப்ரவரி 24இல் உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் தொடங்கியது. உக்ரைனில் 40,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கிறார்கள். ஏராளமான ரஷ்ய வீரர்களும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். உக்ரைனின் பொருளாதாரம் நிலைகுலைந்திருக்கிறது.

இந்தச் சூழலில் ரஷ்யாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்திருக்கும் டிரம்ப்பின் நகர்வுகள் பெரும் குழப்பத்துக்கு வழிவகுத்திருக்கின்றன. உக்ரைன் போர் நிறுத்தம் தொடர்பாக, பிப்ரவரி 18இல், ரியாத் நகரில் உக்ரைனை அழைக்காமல் ரஷ்யாவுடனேயே டிரம்ப் அரசு பேச்சுவார்த்தை நடத்தியது. உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியை சர்வாதிகாரி என்றும், போர் தொடங்குவதற்கு அவர்தான் காரணம் என்றும் டிரம்ப் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் மேலும் அதிர்ச்சி தருகின்றன.

ரஷ்யா கொடுத்த நெருக்கடிகளை எதிர்கொள்ள அமெரிக்காவைத்தான் பெரிதும் நம்பியிருந்தது உக்ரைன். ஆனால், உக்ரைனுக்கு இதுவரை செய்த ராணுவ உதவிகளுக்கு மாற்றாக உக்ரைனின் கனிமப் பொருள்களை அமெரிக்காவுக்கு வழங்க வேண்டும் என்று டிரம்ப் வைத்த நிபந்தனை பலரையும் அதிர்ச்சிக்கும் வியப்புக்கும் ஆளாக்கியிருக்கிறது. உக்ரைனின் கனிமவளத்தில் ஏறக்குறைய பாதியைச் சுரண்டும் ஒப்பந்தத்துக்கு வேறு வழியின்றி உக்ரைன் பணிய நேர்ந்திருக்கிறது.


உக்ரைன் போருக்கு அமைதியான தீர்வு கோரியும், ரஷ்யப் படைகளை முழுமையாக வெளியேற்றக் கோரியும் ஐநா பொது அவையில் உக்ரைனும் அதன் ஆதரவு நாடுகளும் கொண்டுவந்த தீர்மானம், போரை நிறுத்த வேண்டும் என்பதைத் தாண்டி காத்திரமான கோரிக்கை ஏதும் இல்லாமல் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானம் என இரண்டையும் இந்தியா புறக்கணித்துவிட்டது.

டிரம்ப்பின் இந்தப் போக்கைப் பார்க்கும்போது, இதுவரை அமெரிக்காவைச் சார்ந்திருந்த நாடுகளும் அமைப்புகளும் அமெரிக்காவின் புறக்கணிப்பை எதிர்கொள்ள நேரலாம் என்கிற சந்தேகம் எழுகிறது. உக்ரைனின் பல பகுதிகளை புதின் அரசு சொந்தம் கொண்டாடிவரும் நிலையில், தைவான் சீனாவின் ஒரு பகுதிதான் என ஷி ஜின்பிங் வலியுறுத்திவருகிறார். புதினுக்கு ஆதரவாக உக்ரைனைக் கைவிட்டது போல, சீனாவுக்கு ஆதரவாக தைவானையும் டிரம்ப் கைவிட நிறைய வாய்ப்புகள் உள்ளன. இது ஓர் உதாரணம்தான்.

வல்லரசு நாடுகள் இப்படி ஒரு புதிய கூட்டணியாக உருவெடுத்திருப்பதால், அவற்றின் அழுத்தத்துக்குச் சிறிய நாடுகள், வளர்ந்துவரும் நாடுகள் பணிந்துபோவதைத் தவிர வேறு வழி இருக்காது. இந்தப் போக்கு ஜனநாயக சக்திகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தவும் வாய்ப்பு இருக்கிறது. இந்தியா போன்ற நாடுகள் இவ்விஷயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி, உலகளாவிய அளவில் ஒருமித்த கருத்தை எட்ட முயல வேண்டும்!

## தாம்பரம் கடபேரியில் ஸ்ரீ தாந்தோன்றி அம்மன் ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா முன்னிட்டு மயான கொள்ளை பூஜை





தாம்பரம் மார்ச் 01


தாம்பரம் கடபேரியில் ஸ்ரீ தாந்தோன்றி அம்மன் ஆலயத்தில் 10 ஆம் ஆண்டு மகா சிவராத்திரி விழா முன்னிட்டு மயான கொள்ளை பூஜை நடைபெற்றது.

சென்னை அடுத்த தாமரம் கடப்பேரி பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ தாந்தோன்றிய அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா முன்னிட்டு மயான கொள்ளை பூஜை இந்து திராவிட மக்கள் கட்சியின் ஆண்மீக மாவட்ட தலைவர் ஆர்த்தி அம்மா தலைமையில் வெகுவிமர்சியாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக இந்து திராவிட மக்கள் கட்சியின் தேசிய தலைவர் டாக்டர் ரமேஷ்பாபுஜி கலந்து கொண்டு சிறப்பு பூஜை செய்து நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். மயான கொள்ளை நிகழ்ச்சியில் ஆர்த்தி அம்மா காளிவேடமிட்டு முக்கிய வீதி வழியாக தாரை தப்பட்டை முழங்க ஊர்வலம் சென்று இறுதியாக சிவன் கையில் இருந்த பிரம்ம கபாலம் சூரனை வதம் செய்து அழித்தார்.

இது மயான கொள்ளை பூஜை என புராணங்கள் தெரிவிக்கின்றன இநிகழ்ச்சியில் இந்து திராவிட மக்கள் கட்சி மற்றும் ஆலய நிர்வாகிகள் உட்பட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## இரவு நேரங்களில் பயணிகளை அலைக்களிக்கும் தனியார் டிராவல்ஸ் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க கோரிக்கை







திருவாடானை. மார்ச்.1

இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரம்,ஆர்.எஸ் .மங்கலம், சின்னகீரமங்கலம்,மற்றும் சிவகங்கை மாவட்டம் புளியால்,தேவகோட்டை, காரைக்குடி வழியாக சென்னை செல்லும் தனியார் டிராவல்ஸ்ஷில் சோழந்தூர் ,பாரனூர், ஆர் எஸ் மங்கலம் கற்கத்தக்குடி, ஆனந்தூர், திருத்தேர்வளை திருவாடானை,நத்தகோட்டை,கூடலூர் சுற்று வட்டார பகுதியில் உள்ள பொதுமக்கள் அவ்வப்போது சென்னை செல்ல ஆன்லைனில் டிராவல்ஸ் ஷில் பயணச்சீட்டு புக் செய்து பயணம் செய்வது வழக்கம் இவ்வாறு பயணம் செய்யும் பயணிகளை உரிய நேரத்தில் உரிய இடத்தில் ஏற்றாமல் இரவு நேரங்களில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் குழந்தைகள் வரை காத்திருக்க வைப்பது ஒரு சில நேரங்களில் குறித்த நேரத்தை விட முன் கூட்டியே டிராவல்ஸ் சென்று விடுவதால் அதிக கட்டணம் செலுத்தி பயணச்சீட்டு எடுத்தும் பயணிகள் அழக்களிக்கபடுவதாகவும் இது குறித்து பயணிகள் கேள்வி எழுப்பினால் ஒருமையில் பேசுவதையும் பேருந்தை இயக்கி கொண்டு வருபவர்கள் தொடர் கதையாக வைத்துள்ளனர் இதனால் பயணிகள் வேதனை அடைந்து வருவதாகவும் இந்த பேருந்தின் பயண நேரங்கள் குறித்து பயணிகளின் நலனை கருத்தில் கொண்டு அவ்வப்போது அதிகாரிகள் திடீர் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் எனவும் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கையும் இல்லையெனில் பாதிக்கப்படும் பயணிகள் பேருந்தை சிறை பிடிக்க நேரிடும் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதுமட்டுமின்றி டிராவல்ஸ் நிர்வாகம் பயணிகளிடம் ஊழியர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் எனவும் கற்றுக் கொடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர் .

காத்து இருந்து பார்ப்போம் தனியார் டிராவல்ஸ் மீது அதிகாரிகள் திடீர் ஆய்வு நடவடிக்கை எடுப்பார்களா??? இல்லை பாதிக்கப்படும் பயணிகள் பேருந்தை சிறை பிடிப்பார்களா?






சிவகங்கை நகராட்சி மன்னர் மேல்நிலைப் பள்ளியில் 4ஆம் ஆண்டு புத்தகத் திருவிழா2025 பள்ளி மாணவர்களுக்கு இடையே நடைபெற்ற ஓவிய போட்டியில் கீழநெட்டூர் ஊராட்சி ஒன்றிய அரசு நடுநிலைப்பள்ளி மாணவி அனுஷ்கா, துவாரகா ஆகியோர் கலந்துகொண்டு இரண்டு மற்றும் மூன்றாம் இடங்களை பிடித்தனர். பள்ளிக்குப் பெருமையை தேடித்தந்த மாணவிகளை தலைமை ஆசிரியர் (பொறுப்பு) இருவரையும் பாராட்டி வாழ்த்தினார்.



உலக கிரிக்கெட் வரலாற்றில் முன்னே டான் பிராட்மன், சங்கக்கார. இப்போது விராட் கோலி. காலத்திற்கேற்ற பலர் வந்தாலும், என்றும் மாறாத கிரிக்கெட் வீரன் சச்சின் டெண்டுல்கர். வயது ஒரு எண் மட்டும்தான், தலைவரின் சிஷீஸ்மீகூஷீ ஞ்கூஷீவீஸ்மீ ஸ்டைலும், அடிக்கும் மின்சாரமும் இன்னும் அதே போலவே. 21 பந்துகளில் 31 ஒட்டங்களை விளாசி, மீண்டும் தன்னை நிரூபித்தார். காலம் மாறலாம். வீரர்கள் மாறலாம். ஆனால் கிரிக்கெட்டில் “சச்சின்” என்ற முத்திரை என்றென்றும் மாறாது.

## சிவகங்கை 4 வது புத்தகத் திருவிழாவில் மகா பிரபு எழுதிய மனிதம் நூல் வெளியீடு











சிவகங்கை மார்ச்.1

சிவகங்கை 4 வது புத்தகத் திருவிழாவின் ஏழாம் நாள் மாலை நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலர் இறையன்பு “மனிதம்“ என்ற தொகுப்பு நூலை வெளியிட சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் பெற்றுக்கொண்டார்.

இந்நூல் 25 எழுத்தாளர்கள் இணைந்து எழுதிய ஒரு கட்டுரை நூலாகும்.

சித்தி பெரியப்பா மாமியார் இயற்கை இறைவன் சுற்றத்தார் காவல்துறை கல்வி நகைச்சுவை செவிலியர் புத்தகம் இசை அலுவலகம் குழந்தைகள் தொழில்நுட்பம் தோல்வி நகரம் காலம் விவசாயி சுற்றுலா திருவிழா குலதெய்வம் உடல்நலம் ஒழுக்கம் மனிதம் ஆகிய 25 தலைப்புகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது.

அலுவலக உறவு புரிந்துணர்வு உறவாக இருப்பதையும், கடமை மிக்க உறவு காவல்துறை என்பதையும் சுற்றத்தரின் உறவு நல்வாழ்த்துக்கள் எவ்வாறு வழிவகுக்கும் என்பதையும், தொடர் தோல்வியும் விரைவில் வெற்றியை தரக்கூடியது தான், புத்தகங்கள் புத்துணர்ச்சியை கொடுக்கக் கூடியவை, இசைந்தால் இசையும் இனிய உறவு தான், இவ்வுலகில் ஒப்புயர்வானது செவிலியர் பணி போன்ற கருத்துக்கள் இந்நூலின் தூண்களாக அமைந்துள்ளன.

இந்நிகழ்வில் வானொலி நிலைய இயக்குனர் சுந்தர ஆவுடையப்பன், தேவகோட்டை சார்பு ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் மாவட்ட மருத்துவ அலுவலர் மீனாட்சி ஆகியோருடன் இந்நூலின் தொகுப்பாசிரியர் மகா பிரபு, தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட செயலாளர் ஆரோக்கியசாமி, தொல்லியல் ஆய்வாளர் புலவர் காளிராசா சிவகங்கை தமிழவைய உறுப்பினர் வித்யா கணபதி, கவிஞர் மு. தமிழ்கனல், தமுஎகச சிவகங்கை கிளைச் செயலாளர் கமல்ராஜன், மாலை தந்தி நாளிதழ் இணை ஆசிரியர் கரு.சந்துரு ஆகியோர் கலந்து கொண்டனர்.

## செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் வக்பு திருத்த சட்டத்தை எதிர்த்து மனிதநேய மக்கள் கட்சி சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்




செங்கல்பட்டு, மார்ச்.1

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் வக்பு திருத்த சட்டத்தை எதிர்த்து மனிதநேய மக்கள் கட்சி சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் எஸ்கே.ஜாகிர் உசேன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு அழைப்பாளர்களாக திராவிட சிந்தனை பேச்சாளர் பா.நாஞ்சில் சம்பத், மனிதநேய மக்கள் கட்சி மாநில துணை பொது செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் தாம்பரம் எம்.யாக்கூப் எம்.சி, கண்டன உரையாற்றினார்கள்.

தாம்பரம் ஜிம்.ஆ பள்ளிவாசலில் இருந்து சண்முகம் சாலை பாரதி திடலுக்கு பேரணியாக ஆண்கள் பெண்கள் சிறுவர்கள் என 1000த்திற்கும் மேற்பட்டவர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

மமக காஞ்சி மாவட்ட தலைவர் ஜே.சலீம் கான், தமுமுக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் பாருக் அகமது, காஞ்சி மாவட்டச் செயலாளர் எம்.அமீர்கான் மற்றும் தாம்பரம் வட்டார ஐக்கிய ஜமாத் நிர்வாகிகள் ஆகியோர் முன்னிலை ஆற்றினார்கள்.

செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் எம்.அப்துல் ரஹீம் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். மேலும் நிகழ்ச்சியில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன், தாம்பரம் வட்டார ஐக்கிய ஜமாத் தலைவர் எம்.கே. நாகூர் கனி, மதிமுக மாவட்ட செயலாளர் மாவை மகேந்திரன், தி.க. தாம்பரம் மாவட்ட தலைவர் பா.முத்தையன், மற்றும் மமக மாவட்ட பொருளாளர் எம்.சபியுல்லா, மாநில செயற்குழு உறுப்பினர் எம்.அப்துல் ரவூப், மாநில வழக்கறிஞர் அணி செயலாளர் எம்.முஜிபுர் ரஹ்மான், மாநில வர்த்தக அணி செயலாளர் ஏ.கௌஸ் பாஷா, மாநில தொழிற்சங்க அணி செயலாளர் ஏ.சாதிக் பாஷா, மாநில தொழிற் சங்க அணி பொருளாளர் ஏ.ஆஷிக் ஹமீது, மக்கள் உரிமை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அணி துணைச் செயலாளர் எஸ்.முகம்மது நயினார், தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் ஏ.முகம்மது ஜமில், மாநில விளையாட்டு அணி துணை செயலாளர் ரஹ்மத்துல்லா, மாநில செயற்குழு உறுப்பினர் எஸ். ஜிந்தாமதார், எஸ்எம்ஜ.மண்டல செயலாளர் ஜெய்னுல் ஆபிதீன், மாவட்டத் துணைத் தலைவர் ஏ.என். அப்துல் ரகுமான், மாவட்ட துணை செயலாளர் சாகுல் ஹமீது, கபீர் கான், என்.மன்சூர் அலிகான், ஏ.முகமது யூனுஸ், ஜே.ஜமால் மற்றும் மாவட்ட, பகுதி, ஒன்றிய, வார்டு நிர்வாகிகள் ஜமாத்தார்கள் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு வக்பு திருத்த சட்டத்துக்கு எதிராக கண்டனத்தை பதிவு செய்தார்கள்.

இறுதியாக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் அப்துல் காதர் நன்றி உரையாற்றினார்







சிவகங்கை மாவட்ட கிக் பாக்ஸிங் சங்க வீரர்களை நேரில் அழைத்து டெல்லியில் நடைபெற்ற சர்வதேச கிக்பாக்ஸிங் போட்டிகளில் தங்க பதக்கம்வென்று சிவகங்கை மண்ணிற்கு பெருமை சேர்த்தமைக்காக கே.செந்தில்வேலனை சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் நேரில் சந்தித்து பாராட்டி வாழ்த்தினார்.மேலும் தேசிய அளவில் கிக்பாக்ஸிங் போட்டியில் வெற்றிபெற்ற வீரர்களின் கோரிக்கைகளையும் கேட்டு தெரிந்து கொண்டார் . மேலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் பெறக்கூடிய உதவித்தொகை தாமதம் குறித்து ஆலோசிப்பதாக தெரிவித்துள்ளார்.



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலம் 49வது வார்டு கஸ்தூரிபாய் நகர் பகவத்சிங் தெருவில் உள்ள அவ்வை நடுநிலைப் பள்ளியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரத்தில் மாணவ மாணவிகளுக்கு மதிய உணவாக அறுசுவை உணவை 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் வழங்கினார் உடன் பகுதி நிர்வாகிகள் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்டம் கழக நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்..

# ஆயக்குடியில் திமுக சார்பில் தமிழக முதலமைச்சர் முக.ஸ்டாலின் பிறந்தநாள் விழா



பழனி மார்ச்.1

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த ஆயக்குடி பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் அரசு தொடக்கப்பள்ளிகளில் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு ஆயக்குடி பேரூர் திமுக சார்பில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு விலையில்லா பாடப் புத்தக உபகரணங்கள் வழங்கும் விழா நிகழ்ச்சி நடைபெற்றன..

இந்நிகழ்வில் பேரூர் செயலாளர் சின்னத்துரை ஒன்றிய செயலாளர் சுவாமிநாதன் பேரூராட்சி தலைவர் மேனகா ஆனந்தன் துணைத் தலைவர் சுதாமணி கார்த்திகேயன் ஆகியோர் தலைமையில் அனைத்து பள்ளிகளுக்கும் சென்று பள்ளி மாணவ மாணவிகளிடையே தமிழக அரசின் செயல் திட்டங்கள் பற்றியும் பள்ளி கல்வித்துறைக்கு தமிழக அரசு செய்துவரும் செயல்பாடுகள் பற்றியும் மாணவிகளிடையே எடுத்துக் கூறி முதலமைச்சரின் பிறந்தநாள் விழாவை கொண்டாடி மகிழ்ந்தனர்.

தொடர்ந்து இந்நிகழ்வில் ஆயக்குடி திமுக கவுன்சிலர்கள் கட்சி நிர்வாகிகள் சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் என அனைவரும் திரளாக கலந்து கொண்டு தமிழக முதலமைச்சரின் பிறந்தநாள் விழாவை வெகு விமர்சையாக கொண்டாடி மகிழ்ந்தனர்...

# பெரியகுளம் அருகே கைலாசநாதர் மலைக் கோயிலில் மஹா சிவராத்திரி விழா;

பெரியகுளம் மார்ச்.1

தேனி மாவட்டம் பெரியகுளம் கைலாசபட்டி அருகில் உள்ள கைலாசநாதர் மலைக்கோயிலில் 26/02/25 புதன்கிழமை இரவு நான்கு கால பூஜைகள் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் நான்கு கால பூஜையில் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். ஒவ்வொரு கால அபிஷேகத்தில் கைலாசநாதர்க்கு பால், தயிர், சந்தனம் மற்றும் மூலிகைகளை கொண்டு ஒன்பது வகையான அபிஷேகம் நடைபெற்று அலங்காரங்கள் செய்து அதன் பின் தீபாராதனைகளும் நடைபெற்றது கூட்டு வழிபாடும் உலக நன்மை கருதி சிறப்பு வழிபாடுகளும் நடைபெற்றது. மாலை 6.00 மணி முதல் இரவு 9 மணி வரை அன்னதானமும் ஒவ்வொரு கால பூஜை முடிந்தவுடன் அன்ன பிரசாதமும் கட்டளைதாரர்கள் எம்.வீரராஜ் ரியல் எஸ்டேட், எம். இராம தண்டபாணி முன்னாள் சேர்மன் தாமரைக்குளம் வழங்கினார்கள். இரவு ஆன்மீக சொற்பொழிவும் நடைபெற்றது





. பக்தர்களுக்கு ருத்ராட்சம் விபூதி பிரசாதம் வழங்கபட்டது ஏற்பாடுகளை அன்பர் பணி செய்யும் பராமரிப்பு குழுவினர்கள் சார்பாக செய்த இருந்தனர்.

# சொகுசு காரில் பட்டா கத்தியுடன் வலம் வந்த நபரை கைது செய்த காவல்துறை

தேவகோட்டை மார்ச்.1

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை அருகே பாவனாகோட்டை பரமக்குடி கிராமத்தில் தேவகோட்டை சருகனி நெடுஞ்சாலையில் வேலாயுதபட்டிணம் காவல் நிலைய இரவு ரோந்து அதிகாரி சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்வி மற்றும் காவலர் சதீஷ்குமார் ஆகிய இருவரும் இரவு வாகன தணிக்கை செய்யும் போது அந்த வழியாக வந்த நான்கு சக்கர வாகனத்தை வழிமறித்து சோதனை செய்தபோது வாகனத்தில் இருந்த சுமார் 2 அடி நீளமுள்ள இரும்பு வாளுடன் (பட்டா கத்தி) வலம்வந்த தேவகோட்டை தாலுகா இறகுசேரியை சேர்ந்த சின்னத்தம்பி மகன் முத்துக்குமார் என்பவரை விசாரணைசெய்ததில் இவர் ஏற்கனவே இரண்டு கொலை வழக்குகளில் தொடர்புடையவர் என்றும் தேவகோட்டை நகர் காவல் நிலைய சரித்திரபதிவேட்டில் உள்ள நபர் என தெரியவந்துள்ளது. இவரை ஆயுத சட்டத்தின் படி கைது செய்து நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். எனவே இதுபோன்று குற்றசெயலில் ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கபடும் என மாவட்ட கண்காணிப்பாளர் ஆஷிவ் ராவத் தெரிவித்தார்.



கன்னியாகுமரி மாவட்டம் பளுகல் அருகே மண்ணெண்ணெய் குடித்த குழந்தை உயிரிழப்பு காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்..

# மதுரை மாவட்டம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பாக சமுதாய வளைகாப்பு விழா



மதுரை : மார்ச்.1

மதுரை மாவட்டம், மத்திய சட்டமன்ற தொகுதி எஸ் எஸ் காலனி பகுதியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில்,நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு சீதனப் பொருட்களை தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன் வழங்கினார். மதுரை மாவட்ட ஆட்சியர் சங்கீதா ,மேயர் இந்திராணி பொன் வசந்த்,மண்டலத்தலைவர் பாண்டிச்செல்வி,ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் ஷீலா சுந்தரி, உதவி நகர்நல அலுவலர் அபிஷேக், மதுரை மேற்கு வட்டாட்சியர் செந்தாமரை வள்ளி, மாமன்ற உறுப்பினர் செல்வி,பகுதி திமுக செயலாளர் பி .கே.செந்தில்,வட்ட திமுக செயலாளர்கள் பி.கே சுரேஷ்,பூங்கா மணிகண்டன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரிக்கு நேற்று வருகை தந்த கேரளா கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர் வை நாகர்கோவில் ஆர்டிஓ காளீஸ்வரி பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்..



தென்னக ரயில்வேயின் கீழ் இயங்கும் ரயில்களில் முன்பதிவில்லா பெட்டிகளின் எண்ணிக்கையை குறைக்க ரயில்வே நிர்வாகம் முடிவு செய்திருப்பதற்கு கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் கண்டனம் தெரிவித்துள்ளார்..

# நீலகிரி மாவட்டத்தில் மகசூல் குறைந்தும் மேராகாய் விலை சரிவு விவசாயிகள் கவலை



குன்னூர், மார்ச்.1

நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு அடுத்தபடியாக மலைத் தோட்ட காய்கறி பயிர்கள் தான் அதிகளவில் பயிரிடப்பட்டு வருகிறது. இதில் குறைந்த முதலீட்டில் கூடுதல் மகசூல் கிடைக்கும் மேராக்காய் விவசாயத்தில் பெரும்பாலான விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கடந்த டிசம்பர் மாதம் முதல் உறை பனியின் தாக்கம் அதிகரித்ததால் தாழ்வான பகுதியில் இருந்த நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவிலான மேரக்காய் பந்தல்கள் கருகியது.இதனால் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது. இதனிடையே உயரமான பகுதிகளில் பயிரிடப்பட்ட மேராகாய் பந்தல்களில் ஓரளவு மகசூல் கிடைத்து வந்ததால் மார்க்கெட்டில் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 15 வரை விலை கொடுத்து வந்த நிலையில், தற்போது இந்த காய்கள் கர்நாடகாவில் இருந்து கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுவதால்நீலகிரியில் விளையும் மேராகாய் கிலோ ரூபாய் ஐந்துக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கடும் பொருளாதார சிக்கி தவித்து வருகின்றனர்.

# மதுரை கப்பலூரில் இந்தியாவின் முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனமான ஜி ஸ்கொயர் பாச்சூன் சிட்டி டவுன்ஷிப் குடியிருப்பு திட்டம் துவக்கம்

மதுரை, மார்ச்.1

இந்தியாவின் முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனமான ஜி ஸ்கொயர் பாரம்பரிய கலாச்சார நிறைந்த மதுரையில் தனது ஜி ஸ்கொயர் பார்ட் ஒன் சிட்டி என்ற டவுன்ஷிப் திட்டத்துடன் முதல் முறையாக உலகத்தரம் வாய்ந்த வசதிகளுடன் கூடிய மனைகள் வில்லாக்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளுடன் டவுன்ஷிப்பை உருவாக்கி உள்ளது. நடுத்தர மக்களின் வீட்டுமனை அடுக்குமாடி குடியிருப்பு கனவை நினைவாக்க ரியல் எஸ்டேட் துறையில் சிறப்பான வளர்ச்சி உடன் வரும் ஜி ஸ்கொயர் நிறுவனம் பல்வேறு கட்டுமான நிறுவனங்களுடன் இணைந்து கட்டுமான திட்டங்களில் சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது. மதுரையில் ஜிஸ்கொயர் பார்ச்சூன் சிட்டி கப்பலூர் விமான நிலைய சுற்றுச்சாலையில் முதன்மை குடியிருப்பு திட்டமாக 30 ஏக்கரில் 500 வீட்டு மனைகளை




கொண்டுள்ளது வீட்டுமனைகள் வாங்குவோர் உடனடியாக வீடுகளை கட்டி குடியேறும் வகையில் இந்த இடம் தெரு விளக்குகள் 24 மணி நேர சிசிடிவி கண்காணிப்பு 50க்கும் மேற்பட்ட உலக தரம் வாய்ந்த வசதிகளுடன் மிகவும் சிறப்பம்சத்துடன் தயாராகி வருகிறது குறிப்பாக மதுரையில் வீட்டு மனைகளை வாங்குவோரிடம் சாலை மேம்பாட்டுக்காக வசூலிக்கப்படும் எந்த விதமான கூடுதல் கட்டணங்களையும் ஜி ஸ்கொயர் வாங்காமல் தனித்து நிற்கிறது. உலகத்தரம் வாய்ந்த எய்ம்ஸ் மருத்துவமனை டைட்டில் பூங்கா விமான நிலைய ஓடுபாதை விரிவாக்கம் மெட்ரோ ரயில் என விரிவான வளர்ச்சியை அடைந்து வரும் மதுரையில் ஜி ஸ்கொயர் இன் பார்ட் டைம் சிட்டியில் ஒரு செண்ட் 5.5 லட்சத்துக்கு மட்டுமே வழங்குகிறது

மதுரையில் ஜிஸ்கொயர் ரியல் எஸ்டேட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் பாலராமஜெயம் செய்தியாளர்களிடம் பேசுகையில் : எங்களின் ஜி ஸ்கொயர் பார்ச்சூன் சிட்டி திட்டத்தின் மூலம் குறைந்த விலையில் பல்வேறு நவீன வசதிகளுடன் சிறந்த டவுன்ஷிப்பை மதுரைக்கு கொண்டு வருவது மிகுந்த பெருமை அடைகிறோம். முதன்மை சொத்துக்களை பெறுவதிலும் நிலத்தை மேம்படுத்துவதிலும் எங்கள் நிபுணத்துவம் வாடிக்கையாளரிடம் மிகுந்த வரவேற்பை பெற்று உயர் மதிப்புள்ள திட்டங்களை வழங்க எங்களுக்கு உதவுகிறது எங்களிடம் வீட்டுமனையில் வாங்குவதற்கு எந்தவிதமான சட்ட சிக்கல்களும் வில்லங்கமும் இல்லாத வகையில் முறையான ஆவணங்கள் மூலம் மனைகள் விற்பனை செய்து வருகிறோம் கடந்த 12 ஆண்டுகளில் 14 நகரங்களில் 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்களை பெற்றுள்ளது எங்களின் பெருமிதத்துக்குரிய விஷயம் ஆகும் சுமார் 4000 ஏக்கர் நலத்தை ஒருங்கிணைத்து ரியல் எஸ்டேட் துறையில் புதிய சாதனை படைத்தது எங்களுக்கு மேலும் பெருமை சேர்ப்பதற்குரியதாகும் என தெரிவித்தார்.

# தேவகோட்டை நகரில் வீடுகளை உடைத்து தங்க நகைகள் ரொக்க பணம் திருட்டு வழக்கில் குற்றவாளி கைது

தேவகோட்டை மார்ச்.1

தேவகோட்டை நகரில் இரண்டு வீடுகளை உடைத்து தங்க நகைகள், 2,85,000 ரொக்க பணம் திருட்டு வழக்கில் குற்றவாளியை கைது செய்தனர்.

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகரில் கடந்த சில நாட்களுக்கு முன்பு வள்ளியப்ப செட்டியார் ஊரணி வடக்கு பகுதியில் வசிக்கும் பாண்டித்துரை மனைவி நாகலட்சுமி (32), இவர் வீட்டின் அருகே உள்ள தனியார் மேல்நிலை பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறார். இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளான அன்று காலை வாரச்சந்தைக்கு

10.30 மணி அளவில் காய்கறி வாங்க சென்றுள்ளார். காய்கறி வாங்கிவிட்டு வீட்டுக்கு வந்து பார்த்த பொழுது வீட்டில் கதவுகள் உடைக்கப்பட்டு பொருள்கள் சிதறி கிடந்து பீரோவில் இருந்த தங்க நகைகள் ரொக்க பணம் ரூபாய் 2,70,000 காணாமல் போனதை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

மேலும் இந்த வீட்டின் அருகே உள்ள ஞானநந்தி நகர் பகுதியில் வசிக்கும் ராமநாதன் மகன் ராஜாமணி





இவர் தனது உறவினர் துக்க வீட்டிற்கு ராமநாதபுரம் சென்று விட்டார். இவரின் வீட்டை உடைத்து தங்க நகைகள் மற்றும் ரொக்க பணம் ரூ.15,000 திருடு போனது. பட்டப்பகலில் நடந்த இச்சம்பவம் பொதுமக்களிடையே அதிர்ச்சி ஏற்படுத்தியது.

இச்சம்பவம் அறிந்த காவல்துறை துணை கண்காணிப்பாளர் கௌதம் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீவிர விசாரணை நடத்தி அப்பகுதி முழுவதும் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்தார்.

ஆய்வாளர்கள் சரவணன், மகேஸ்வரி, சார்பு ஆய்வாளர் ஜெகதீசன், வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில் மாவட்ட கண்காணிப்பாளர் ஆஷிவ் ராவத் உத்தரவின் பேரில் துணைக் கண்காணிப்பாளர் கௌதம் தலைமையிலான ஆய்வாளர்கள் சரவணன், மகேஸ்வரி, சார்பு ஆய்வாளர்கள் உதயகுமார், ஜெகதீசன், இளையராஜா, சிறப்பு சார்பு ஆய்வாளர்கள் முத்துக்குமார், ராமச்சந்திரன், தலைமை காவலர்கள் பார்த்திபன், கோபாலகிருஷ்ணன், கார்த்திக், விஜய் செந்தாமரை கண்ணன், செண்பக வேல், கார்த்தி மற்றும் காவல்துறையினர் 5 தனிப்படையினர் அமைக்கப்பட்டுவிசாரணையை தீவிர படுத்தினார்கள்.

மேலும் விசாரணையில் ஆசிரியர் வீட்டில் திருடு போன நகைகள் 23 பவுன் தங்க நகைகள் மற்றும் ரூபாய் 2 லட்சம் என உறுதி செய்யப்பட்டது. கண்காணிப்பு கேமரா மற்றும் தடயங்கள் அடிப்படையில்

காரைக்குடி அன்னை சத்யா நகர் ஞானசேகரன் மகன் சரவணன் (40) பிடித்து விசாரணை செய்ததில் அவரிடமிருந்து 32 பவுன் தங்க நகைகள் ரொக்க பணம் ரூபாய் 2 லட்சத்து 15 ஆயிரம், மீட்கப்பட்டது .


ஆசிரியர் வீட்டில் திருடிய நகைகள் 100% மீட்கப்பட்டது மேலும் ராஜாமணி வீட்டில் திருடிய நகையில் 4 பவுன் தங்க நகைகள் மற்றும் 15,000 கொக்கப்பணம் பறிமுதல் செய்து திருட்டு சம்பவத்திற்கு உதவியாக இருந்த மேலும் சிலரை கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.




திருப்பூர் மாவட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கிறிஸ்துராஜ் தலைமையில் நேற்று நடைபெற்றது இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன் இணை இயக்குனர் (வேளாண்மை) சுந்தரவடிவேலு, திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் மோகனசுந்தரம், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பிரபு மண்டல இணை இயக்குனர் (கால்நடை பராமரிப்பு துறை) புகழேந்தி மாவட்ட ஆட்சியரின் நேர்முக நேர்முக உதவியாளர் (வேளாண்மை )ஷீலா பூசா லட்சுமி செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல் துறை) கார்த்திகேயன் துணை இயக்குனர்கள் (தோட்டக்கலைத்துறை) எஸ் சுசீலா (வேளாண் வணிகத்துறை) வெங்கடாசலம் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்..




செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலம் 49வது வார்டு அம்பேத்கர் திருமண மண்டபத்தில் மறுசீரமைப்பு பணிகள் நடைபெற்று வருவதை 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார் உடன் மாமன்ற உறுப்பினர்கள் எல்பெரியநாயகம், சி.சுரேஷ், வட்ட நிர்வாகிகள், மற்றும் கழகத் நிர்வாகிகள் உடனிருந்தனர்



சிவகங்கை நகராட்சி பேருந்து நிலையம் முன்பாக செயல்பட்டு வந்த தெருவோரம் பழக்கடை வியாபாரியின் கடைகளை சிவகங்கை நகராட்சி ஆணையாளர் தலைமையில் தூய்மை பணியாளர்கள் அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட முயன்ற போது வியாபாரிகள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் பின்னர் சிவகங்கை நகர் காவல் துறையினர் வியாபாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தனர்.




ஈரோடு மாவட்டம் பவானி உட்கோட்டத்தில் நிதியாண்டிற்கான ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 150 லட்சம் மதிப்பீட்டில் சத்திஅத்தாணிபவானி சாலை 40/2 கிலோமீட்டர் ஆப்பக்கூடல் சாலை சந்திப்பில் பணிகள் நடைபெற்று வருகிறது. பழுதுபார்த்தல் திட்டத்தின் கீழ் தளவாய் பேட்டை பருவாச்சி சாலை 6/7 9/2 கிலோமீட்டர் மற்றும் புன்னம் முதல் பருவாச்சி வரை 90 லட்சம் மதிப்பீட்டிலும் சத்திஅத்தாணிபாவனி சாலை 46 47 கிலோமீட்டர் ஜம்பைகழுங்கு பள்ளம் முதல் பெரியமோளப்பாளையம் வரை 75 மதிப்பெட்டிலும் தார் சாலை அமைக்கும் பணி தொடங்கப்பட்டு நிறைவு பெற்றது சாலை சந்திப்பின் பணியின் முன்னேற்றம் மற்றும் முடிவுற்ற சாலை பணிகளின் தரத்தினை திருப்பூர் தரக கட்டுப்பாடு கோட்ட பொறியாளர் முனைவர் கிருஷ்ணமூர்த்தி, உதவி கோட்ட பொறியாளர் சாந்தி மற்றும் இளநிலை பொறியாளர் குழந்தை வேலன் ஆகியோர் நேற்று ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின்போது நெடுஞ்சாலை துறை பவானி உதவி கோட்ட பொறியாளர் ராஜேஷ் கண்ணா மற்றும் உதவி பொறியாளர் சேகர் ஆகியோர் உடன் இருந்தனர்..

## சிவகங்கை காரைக்குடி அருகே காணாமல் போன பெண் உடல் மீட்பு

காரைக்குடி, மார்ச்.1

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி உட்கோட்டம் சி.மெ. வீதியில் உள்ள வாசுதேவன் என்பவருவது மனைவி விஜயலட்சுமி காணாமல் போனதாக 27/10/2010 அன்று கணவர் புகார் அளித்த நிலையில் விஜயலட்சுமி பிரேதம் அவரின் வீட்டின் அருகே கண்டறியப்பட்டது. வழக்கில் தொடர்புடைய சேகர் புதுமைப்பித்தன் ஆகிய இருவரும் விஜயலட்சுமி கொலை செய்து அவர் அணிந்திருந்த சுமார் 2:30 தங்க நகை கொள்ளையடித்துச் சென்றது தெரிய வந்தது மேலும் இருவரும் கைது செய்யப்பட்ட நீதிமன்ற காவல்துறை அனுப்பப்பட்டனர். சிவகங்கை மயிலா விரைவு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்த நிலையில் நேற்று இவ்வுலகில் இறுதி விசாரணை முடிந்து குற்றவாளிகளான சேகர் (42) புதுமைப்பித்தன் (60) இருவருக்கும் ஆயுள் தண்டனை மற்றும் 2000 ரூபாய் அபராதமும் நீதிபதி வழங்கினார். அபராத தொகையை செலுத்த தவறினால் ஆறு மாதம் மெய்க்காவில் தண்டனையும் விதித்து ஏழு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை மற்றும் 2000 அபராதம் செலுத்த தவறினால் மாதம் மெய்க்காவல் தண்டனை விதித்தும் தீர்ப்பளித்தார்.






சோழன் புக் ஒஃப் வேள்ட் ரெக்கார்ட்ஸ் சார்பில் மாரடைப்பு நோய் பெண்கள் பாதுகாப்பு உலக அமைதி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாரத்தான் போட்டி கடந்த (16/02/2025) கன்னியாகுமரியில் ஆரம்பித்து சென்னை வரை நடைபெற்றது இதில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சேர்ந்த நாகேந்திரன் சுமதி தம்பதியரின் புதல்வர்கள் ந.ஹரித்திக் ராஜா, ந.மோசிக் ராஜா சிறுவர்கள் கலந்துகொண்டு 707 கிலோமீட்டரை 13 நாட்களில் சென்றடைந்து சோழன் புக் ஒஃப் வேள்ட் ரெக்கார்ட்ஸ் புத்தகத்தில் இடம் பிடித்தனர். இளம் வயதிலேயே சாதனை படைத்த மாணவர்களை பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பாராட்டி வருகின்றனர் .

## மானாமதுரை அரசு நிகழ்ச்சியில் வெடி வெடித்த சர்ச்சையால் பரபரப்பு

மானாமதுரை, மார்ச்.1

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அரசு மருத்துவமனையில் நேற்று புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா அமைச்சர் பெரிய கருப்பன் தலைமையிலும் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் முன்னிலையிலும் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மருத்துவமனை வளாகத்தில் ஸ்பீக்கர் கட்டியும் பட்டாசுகள் வெடித்தும் பணியிலிருந்து செவிலியர்களை அழைத்து வந்து அரசு விழா நடத்தியதாக தனியார் தொலைக்காட்சி குற்றச்சாட்டு வைத்தது. அப்போது அதில் முன்னாள் அமைச்சரும் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் என்ற பெயரை உச்சரிக்காமல் மானாமதுரை எம்எல்ஏ ரவிக்குமார் என்று ஒளிபரப்பு செய்தது சட்டமன்ற உறுப்பினரின் பெயரை குறிப்பிடாமல் கணவரின் பெயரை குறிப்பிட்டுள்ளது பெரும் சர்ச்சையை கிளப்பி உள்ளது..




மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொதுமக்களுக்கு, பரவை, எம்.எஸ்.மஹாலில் குறைதீர்க்கும் முகாமை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி குத்துவிளக்கேற்றி வைத்து மனுக்களை பெற்றுக்கொண்டார். மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் ஆகியோர் உடன் உள்ளனர்.

## மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் ஆபத்தான அடிவயிற்றுக் குருதிக்குழாய் வீக்கத்திலிருந்து முதியவர் உயிரை காப்பாற்றிய உள்நாள அறுவைசிகிச்சை

மதுரை, மார்ச் 01,

மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைகள் மேற்கொள்ளப்பட்ட இந்த செயல்முறையானது, 70 வயதான முதியவரின் உயிரைக் காப்பாற்றியிருக்கிறது. எந்த நேரத்திலும் வெடித்து உயிரிழப்பை ஏற்படுத்தக்கூடிய தமனி அழற்சி, அடிவயிற்றில் இவருக்கு இருந்தது கண்டறியப்பட்டது. அடிவயிற்றின் பிரதான இரத்தநாளத்தில் ஆபத்தான இந்த வீக்கமும், விரிவாக்கமும் கடும் ஆபத்தை ஏற்படுத்தியிருந்தன.

கார்டியாக் சயின்சஸ் துறையின் தலைவர் டாக்டர். சிவக்குமார், இரத்தநாள அறுவைசிகிச்சை நிபுணர் டாக்டர். பிரபு குமரப்பன் ஆகியோர் ஒருங்கிணைந்து, சருமத்தின் வழியாக ணிகூஷிகிஸி என அறியப்படும் மருத்துவ செயல்முறையை இம்மருத்துவமனையில் அமைந்துள்ள மிக நவீன கேத் லேப் ல் வெற்றிகரமாக மேற்கொண்டனர். இதயமயக்க மருந்தியல் துறையின் தலைவர் டாக்டர். ஷி. குமார் மற்றும் அவர்களது குழுவினரின் ஆதரவுடன் இச்செயல்முறை, நிகழ்த்தப்பட்டது, ஃபுளோரோஸ்கோப்பிக் இமேஜிங் வழிகாட்டலின் கீழ், நோயாளியின் க்ராயின் பகுதியில் சிறிய துளையிட்டு, ஸ்டென்ட்டை பொருத்துவது இச்செயல்முறையில் இடம் பெற்றது.




க்ராயின் பகுதியில் செய்யப்பட்ட நுழைவு துளைகளை மூடுவதற்கு தனி உத்திகளை மருத்துவக் குழுவினர் பயன்படுத்தினர். இதன் காரணமாக, தையலிடுவதற்கான அவசியம் ஏற்படவில்லை. இந்த புதுமையான அணுகுமுறையானது, அறுவை சிகிச்சைக்குப் பிறகு நோயாளிக்கு ஏற்படும் அசௌகரியத்தை பெரிதும் குறைப்பதற்கு உதவி, மீண்டும் இயல்புநிலைக்கு திரும்புவதை துரிதமாக்கியிருக்கிறது. அதற்குப் பிறகு மூன்று மாத கண்காணிப்பை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருப்பது இந்த சிகிச்சையின் பயனளிக்கும் திறனை நேர்த்தியாக வெளிப்படுத்தியிருக்கிறது.

முதியவரின் உயிரைக் காப்பாற்றுவதற்கான இந்த வெற்றிகர சிகிச்சை குறித்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு நிகழ்வில் கார்டியாக் சயின்சஸ் துறையின் முதுநிலை நிபுணர்கள் டாக்டர். கணேசன், டாக்டர். சம்பத்குமார், டாக்டர். செல்வமணி மற்றும் டாக்டர். ஜெயபாண்டியன் ஆகியோருடன் இணை ஆலோசகர் டாக்டர் தாமஸ் சேவியர், மற்றும் திலீப் ஆகியோரும் பங்கேற்றனர்.


கார்டியாக் சயின்சஸ் துறையின் தலைவர் டாக்டர். சிவக்குமார் இது குறித்து கூறியதாவது: "கடுமையான அடிவயிற்று வலியோடு இந்நோயாளி எங்களிடம் அழைத்து வரப்பட்டிருந்தார். ஒரு மாத காலத்திற்கு அவரால் சரியாக சாப்பிட முடியவில்லை. அவரது அடிவயிற்று தமனியில் ஆபத்தான வீக்கம் இருப்பதை நாங்கள் கண்டறிந்தோம். ஒரு டயரின் பலவீனமான பகுதி வீங்கி, புடைத்துக் கொண்டிருப்பது போன்றதே இது. இந்த வீக்கமானது, 7.2 செ.மீ. அளவுடன் பெரிதாகவே இருந்தது. இந்த வீக்கம், அவரது இடுப்புத் தமனிகளை பாதித்திருந்தன. பெருந்தமனியில் கிழிசல் ஏற்படுகின்ற கடும் ஆபத்தை இந்த வீக்கமானது ஏற்படுத்தக்கூடியது. அவ்வாறு ஏற்படுமானால், சில நிமிடங்களுக்குள் உயிரிழப்பு நிகழ்ந்து விடும். அவரது வயதை கருத்தில் கொண்டு, அறுவை சிகிச்சை அல்லாத ணிகூஷிகிஸி சிகிச்சையை மேற்கொள்வது என நாங்கள் முடிவு செய்தோம். பெருந்தமனியில் துல்லியமான பழுதுநீக்கல் பணியை செய்வதற்கு இந்த நவீன செயல்முறை உதவியிருக்கிறது."

இரத்தநாள அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர். பிரபு குமரப்பன் சிதம்பரம் இந்த அறுவைசிகிச்சை உத்தியின் பலன்கள் குறித்து விளக்கமளித்தார். சிகிச்சைக்குப்பிறகு நோயாளி மீண்டு குணமடையும் கால அளவை கணிசமாக குறைக்கும் விதத்தில் துல்லியமான, திறன்மிக்க பழுதுநீக்கல் பணியை இந்த நவீன உள்நாள சிகிச்சை அணுகுமுறை சாத்தியமாக்குகிறது என்று குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில், "வழக்கமான ணிகூஷிகிஸி செயல்முறையில் முதுகுத்தண்டில் மயக்க மருந்து செலுத்தி அல்லது பொது மயக்க மருந்து வழங்கி, ஸ்டென்ட் ஐ செலுத்துவதற்கு க்ராயின் பகுதியில் அறுவை சிகிச்சைக்கான கீறல்கள் போடப்படும். ஆனால், இந்நோயாளிக்கு நாங்கள் மேம்பட்ட, சருமத்தின் ஊடாக மிகக்குறைந்த ஊடுருவல் உள்ள வழிமுறையை பயன்படுத்தினோம். இந்த கீறல்களை செய்வதற்குப் பதிலாக, க்ராயின் பகுதியில், சிறிய துளைகளின் வழியாக, சருமத்தின் ஊடாக, தமனிகளை நாங்கள் அணுகினோம். அதன்பிறகு எக்ஸ்ரே இமேஜிங்கைப் பயன்படுத்தி, பெருந்தமனியில் அழற்சி இருந்த பகுதிக்கும், இடுப்புத் தமனி பகுதிக்கும் பொருத்தப்பட வேண்டிய ஸ்டென்ட் ஐ நாங்கள் எடுத்துச் சென்றோம். போடப்பட்ட சிறிய துளைகள் சிறப்பு சாதனங்கள் மூலம் மூடப்பட்டன. குறிப்பிட்ட பகுதியில் மட்டும் உணர்விழப்பு மருந்தை பயன்படுத்தியதால், சிகிச்சை செயல்முறை முழுவதிலும் இந்நோயாளி முற்றிலும் சுயநினைவுடன் நிலையில் இருந்தார் என்பது முக்கியமானது. சிக்கலான இரத்தநாளப் பிரச்சனைகளுக்கு சிகிச்சையளிக்க மேம்பட்ட உள்நாள சிகிச்சை உத்திகள் எந்த அளவிற்கு திறன்மிக்கதாக இருக்கின்றன என்பதை இந்த வெற்றிகர சிகிச்சை நேர்வு சுட்டிக்காட்டுகிறது. இதன் மூலம் நோயாளிகள் இயல்புநிலைக்கு திரும்பலாம், மேலும் பெரிய கீறல்கள் இல்லாத குறுகிய ஊடுருவல் உத்தியின் பலன்களை பெற்று பயனடையலாம்." அதைத் தொடர்ந்து, மூன்று மாத கால மருத்துவ கண்காணிப்பு செயல்முறையானது, இந்நோயாளிக்கு நேர்மறையான சிகிச்சை விளைவுகள் ஏற்பட்டிருப்பதை உறுதி செய்தது

## திருப்பூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து ஆட்சியர் கலந்தாய்வு

திருப்பூர் மார்ச்.1

தமிழக முதலமைச்சர் அனைத்து துறைகளின் சார்பில் பல்வேறு திட்டங்கள் அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். தொலைநோக்கு திட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள் குறித்தும் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களின் நிலை குறித்தும், அனைத்து துறைகளில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்த துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன அந்த வகையில் திருப்பூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி துறையின் சார்பில்



செயல்படுத்தப்பட்ட வரும் பல்வேறு திட்ட பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் திருப்பூர் மாவட்ட ஆட்சிய அரங்கில் மாவட்ட ஆட்சியர் கிறிஸ்துராஜ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலைஞரின் கனவு இல்லம் ஊரக வீடுகள் பழுது பார்க்கும் திட்டம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் நமக்கு நாமே திட்டம் அண்ணா மறுமலர்ச்சி திட்டம் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் ஊரகப் பகுதிகளில் பாரத பிரதமரின் வீடு வழங்கும் திட்டம் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு திட்டம் பண்டைய பழங்குடியினர் பிரதம மந்திரி பெருந்திட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டு திட்டம் தூய்மை பாரத இயக்கம் 15 வது நிதி குழு மாநிலத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் சாலை வசதிகள் உட்கட்டமைப்பு வசதிகள் குடிநீர் தெரு விளக்கு உள்ளிட்டவை அடிப்படை வசதிகள் ஆகியன குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டும் நடைபெற்று வரும் திட்டங்கள் விரைந்து முடிக்கவும் புதிய திட்டங்களுக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யவும் அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161